بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

# ஜுமுஆ பேருரை

May 09 2014

அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்**

*(அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)*

**மொழியாக்கம் : மவ்லவி N. ஷியாவுல் ஹக் ஸாஹிப்**



Biatul Futuh, London

## அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவன் இல்லை

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيْكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُوْلُهُ

أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ - بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعَالَمِيْنَ. اَلرَّحْمٰنِ الرَّحِيْمِ. مٰلِكِ يَوْمِ الدِّيْنِ. اِيَّاكَ نَعْبُدُ

وَ اِيَّاكَ نَسْتَعِيْنُ. اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ. صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ

غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ.

நாம், குறிப்பாக மற்றவர்களிடம் 'எல்லாரிடத்தும் அன்பு, எவரிடத்தும் பகையில்லை' என்ற இந்த முழக்கத்தை எடுத்து வைக்கின்றோம். நாம் இந்த முழக்கத்தை அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் அல்லது அதன் உறுப்பினர்கள், மற்றவர்களைக் குறித்து 'வெறுப்பும், காழ்ப்புணர்ச்சியும் கொண்டுள்ளனர்' என்ற தப்பெண்ணத்தை அகற்றுவதற்காக கூறுகின்றோம் அல்லது அஹ்மதிகள், மற்றவர்களை தன்னை விட சிறந்தவர்களாகக் கருதமாட்டார்கள் அல்லது முஸ்லிம் அல்லாதவர்களின் தப்பெண்ணங்களை களைவதற்கான – அதாவது, இஸ்லாம் அன்பு, நேசம், நன்னடத்தை மற்றும் மற்றவர்களது உணர்வுகளுக்கு மதிப்பளிப்பதற்கான போதனையை வழங்குகிறது. எனவே இஸ்லாம் அநீதியான தீவிரவாத மதம் என்று கூறுவது தவறாகும் என்பதற்காக நாம் இந்த முழக்கத்தை வெளிப்படுத்துகின்றோம் அல்லது நாம் பரஸ்பரம் உள்ள வெறுப்பின் சுவரை கீழே தள்ளி விட்டு அன்பு, நேசத்துடன் வாழ்கின்றோம். மேலும் வாழ விரும்புகின்றோம் என்பதற்காக நாம் இந்த முழக்கத்தை வெளிப்படுத்துகின்றோம். ஆக, நாம் ஏதாவதொரு மனிதத்தொண்டு செய்கின்றோம் என்றால், இதுவும் உலகிலுள்ள ஒவ்வொரு மனிதரிடமும் அன்பு இருக்கிறது என்பதனாலேயே ஆகும். மேலும் நாங்கள் ஒவ்வொருவருடைய உள்ளத்திலிருந்தும் வெறுப்பின் விதையைக் களைந்து அன்பு மற்றும் நேசத்தின் செடியை நட விரும்புகின்றோம் என்பதனால் ஆகும்.

இவை அனைத்தும் ஏன் என்றால், நமது தலைவரும் எஜமானருமான ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்கள் இதனை நமக்கு கற்றுத் தந்துள்ளார்கள். இவை அனைத்தும், எங்களது எஜமானர் பெருமானார் (ஸல்) அவர்களை தமது இரவுகளில், உலகில் அனுதாபம் மற்றும் அன்பு ஏற்பட துடிப்பதனைப் பார்த்ததினால் ஆகும். எந்த அளவு துடித்தவாறு நிம்மதியிழந்தவாறு ஸஜ்தாவில் அழுதவாறு கண்டோம் என்றால், இந்த துடிப்பை அல்லாஹ் திருக்குர்ஆனில் எடுத்துரைத்தவாறு கியாமத் வரை வரக்கூடிய மனிதர்களுக்கு வெறுப்பு மற்றும் காழ்ப்புணர்ச்சியிலிருது பரிசுத்தமான மனிதர்களுக்கு ஆதாரமாகப் பாதுகாத்து விட்டான். இதன் மூலம் வருங்காலத்தில் வரக்கூடியவர்கள் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது ஆட்சேபனை செய்வதற்கு முன்பாக இந்த துடிப்பைப் பற்றி சிந்திக்க வேண்டும். மேலும் பெருமானார் (ஸல்) அவர்களுடன் தொடர்பு கொண்டிருப்பவர்கள், முஸ்லிம்கள் என்று தங்களை அழைத்துக் கொள்பவர்கள் இந்த அழகிய முன்மாதிரியின்படி செயல்பட முயற்சி செய்பவர்களாக வேண்டும்.

***அல்லாஹ் கூறுகின்றான்:***

فَلَعَلَّكَ بَاخِعٌ نَّفْسَكَ عَلٰٓى اٰثَارِهِمْ اِنْ لَّمْ يُؤْمِنُوْا بِهٰذَا الْحَدِيْثِ اَسَفًا *அவர்கள் இந்த விஷயத்தின் மீது ஈமான் கொள்ளவில்லை என்ற கவலையினால் தனது உயிரை மாய்த்துக் கொள்வீரா! (18:7)*

இங்கு ஈமான் கொள்ளவில்லை என்று கூறப்பட்ட விஷயம் எது? அது 'இணை வைக்காதீர்கள்' என்பதாகும். அதாவது அவர்களிடம், 'இணை வைக்காதீர்கள்; இறைவனுக்கு மகனை ஏற்படுத்தாதீர்கள்' என்று கூறப்பட்டது. அதன் மீது அவர்கள் ஈமான் கொள்ளவில்லை. இணை வைத்தல் எப்படிப்பட்ட பாவம் என்றால், இறைவன் அதனை மன்னிக்க மாட்டேன் எனக் கூறுகின்றான்.

ஆக, இந்த அனுதாபமும், அன்பும் தான் ஒவ்வொரு மனிதருடனும் இருக்கிறது. எந்த அளவுக்கென்றால், இணை வைப்பவர்களுடனும் அனுதாபமும், அன்பும் இருக்கின்றது. அவர்களை நேரான வழியில் கொண்டு வருவதற்கு செயல்ரீதியான முயற்சி செய்யும் போது அதே நேரத்தில் அங்கு அவருக்காக துஆ செய்யப்படுகின்றது. ஆக அஹ்மதிகளுக்கு எல்லாரிடத்தும் அன்பு என்பதன் சரியான அறிவைப் பெற வேண்டும் என்றால், நாம் நமது தலைவரான மனித குலத்தின் கருணையாளரிடமிருந்து இதற்கான வழிமுறைகளைக் கற்க வேண்டும். இதனை நாம், நமது ஏகத்துவத்தின் தரத்தை அளவிடும் போதுதான் செய்ய முடியும்.

அடுத்து, நாம் அன்பு மற்றும் அனுதாபத்திற்கான மேலும் ஓர் உதாரணத்தைப் பார்க்கின்றோம். சமுதாயத்தினரிடம் இருந்து அநீதியும், கொடுமையும் எல்லை மீறும்போது, அங்கு அழிவிற்கான துஆ வேண்டப்படவில்லை. மாறாக, 'அல்லாஹ்வே! எனது சமுதாயத்திற்கு நேர்வழியினைக் காட்டுவாயாக! நான் கூறுவது இவர்களது நன்மைக்கே ஆகும் என்பதை இவர்கள் அறிவதில்லை' என துஆ செய்தார்கள். ஒருமுறை, ஏனைய கோத்திரங்கள் கஷ்டமிழைத்த நேரத்தில் ஃபத்வா (தீமைக்காக துஆ) விற்காக கூறப்பட்ட போது, பெருமானார் (ஸல்) அவர்கள் கையை உயர்த்தினார்கள். மக்கள் தற்போது ஃபத்வா செய்யப்படும். அதன் மூலம் ஏனைய கோத்திரங்கள் அழிந்து விடும் எனக் கருதினார்கள். ஆனால் பெருமானார் (ஸல்) அவர்கள், 'அல்லாஹ்வே! நட்பு கோத்திரங்களுக்கு நேர்வழியினை வழங்குவாயாக' என துஆ செய்தார்கள்.

ஆக, அன்பு என்பது தன்னைச் சார்ந்தவர்களுடன் மட்டுமல்ல. அனுதாபம் என்பது தன்னைச் சார்ந்தவர்களுடன் மட்டுமல்ல. மாறாக, ஏனையவர்களுடனும் அன்பு மற்றும் அனுதாபத்தில் அதே நிலைமை தான். இவை அனைத்தும் ஏகத்துவம் நிலைபெற்று விட வேண்டும் என்ற வேதனைகளே ஆகும். இதன் மூலம் உலகம் அழிவிலிருந்து பாதுகாப்புப் பெற வேண்டும் என்பதனால் ஆகும். இன்றும் உலகில் ஆயிரக்கணக்கான இணை வைத்தல் பரவிக் கிடக்கின்றது. இணை வைத்தல் மட்டுமல்ல. மாறாக இறை இருப்பை உலகில் பெரும் பங்கு மறுக்கவும் செய்கின்றது.

ஆக, இறை ஆட்சியினை நிலைபெறச் செய்வதற்கு, ஏகத்துவத்தை நிலைபெறச் செய்வதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது முன்மாதிரியின் மூலம் தந்த அந்த விஷயங்களை நாமும் மேற்கொள்ள வேண்டும். நாம் ஒரு முழக்கத்தை இட்டோம். இதனை உலகம் விரும்பவும் செய்கிறது என்பதில் மட்டும் மகிழ்ச்சி அடைந்துவிட வேண்டாம். இதன் மூலம் பல்வேறு இடங்களில் நம்மைப் புகழ்கின்றார்கள் என்பதாக இருக்க வேண்டாம்.

நாம் எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும். அதாவது இந்த முழக்கம், மனிதன் படைக்கப்பட்ட அந்த மாபெரும் நோக்கத்தை அடைவதற்கான ஒரு வழியாகும். ஆக, நாம் மனிதர்களுடன் கொண்டுள்ள அனுதாபம், அன்பிற்கான பிரச்சாரம், வெளிப்பாடு, செயல்கள் மற்றும் வெறுப்பிலிருந்து தூரம் விலகுவது, வெறுப்பு – அதாவது வெறுப்பிலிருந்து விலகுவது மட்டுமல்ல. மாறாக வெறுப்பையே வெறுப்பது போன்றவை அல்லாஹ்வின் அன்பினைப் பெறுவதற்கும், அவனது ஏகத்துவத்தை நிலைநிறுத்துவதற்குமே ஆகும். நாம் வெறுப்பு கொள்கின்றோம் என்றால், அது எந்த மனிதன் மீதும் அல்ல. மாறாக ஷய்த்தானிய செயல்கள் மீது கொண்டுள்ள வெறுப்பேயாகும். அவ்வாறு இருக்கவும் வேண்டும். ஷய்த்தானிய செயல்களைச் செய்பவர்களுடனும் நமது அனுதாபம் இருக்கின்றது. இந்த அனுதாபம் எதிர்பார்ப்பது, இந்த அசுத்தத்திலிருந்து இவர்களை வெளியே கொண்டு வர வேண்டும் என்பதாகும். இதன் மூலம் அவர்களை இறை தண்டனையிலிருந்து காப்பாற்ற வேண்டும்.

உலகவாதிகளுடனும் நாம் அன்பும், அனுதாபமும் கொண்டிருப்பது உலக ஆதாயத்திற்காக அல்ல. நாம் நமது உள்ளத்தால் உலகவாதிகளின் வெறுப்பைக் களைவதற்கு முயற்சி செய்கின்றோம் என்றால், அவர்களிடமிருந்து எதனையும் பெற வேண்டும் என்பதற்காக அல்ல. மாறாக இறை அன்பைப் பெற வேண்டும் என்பதற்காகவும், ஏகத்துவத்தை நிலைபெறச் செய்வதற்காகவும் ஆகும். ஏகத்துவத்தை முன்பை விட அதிகமாக தமது உள்ளத்தில் நிலைநிறுத்தவும் உறுதிப்படுத்தவும் ஆகும்.

ஆக, உலகவாதிகளுக்கு முன்பு நல்லவர்களாகத் திகழ வெறும் முழக்கங்களை மட்டும் வெளிப்படுத்தாதீர்கள். மாறாக தனது நோக்கத்தை அடைவதற்காக முழக்கங்களை வெளிப்படுத்துங்கள். இந்தக் காலத்தில் நாம் நற்பேறு பெற்றவர்களாவோம். அல்லாஹ் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை

இறை அன்பைப் பெறுவதற்கு, படைப்பினங்களுடன் அனுதாபம் காட்டுவதற்கு, அன்பின் போதனைகளை கடைபிடிப்பதற்காக தேர்ந்தெடுத்துள்ளான். அவர்கள் நமக்கு அந்த வழிமுறைகளைக் கற்றுத் தந்துள்ளார்கள். போதனைகளை வழங்கியுள்ளார்கள்.

***ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:***

மார்க்கத்திற்கு முழுமையான இரண்டு பகுதிகளே உள்ளன. ஒன்று, இறைவனுடன் அன்பு செலுத்துவது, மற்றொன்று, மனிதனுடன் அவனது துன்பத்தை தனது துன்பமாகக் கருதும் அளவிற்கு அன்பு செலுத்துவது, அவனுக்காக துஆ செய்வது ஆகும்.

***ஒரு சபையில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்:***

எதிரியிடம் கூட எல்லை மீறிய கடினம் காட்டக்கூடாது என்பதே எனது கொள்கையாகும். நான் உண்மையாகக் கூறுகிறேன். நீங்கள் எவரையும் தனது எதிரியாகக் கருத வேண்டாம். இந்த வெறுப்பு, காழ்ப்புணர்ச்சியின் பழக்கத்தை முற்றிலும் விட்டு விடுங்கள்.

இங்கு, முதலில் கூறப்பட்ட எதிரியிடம் கூட, எல்லை மீறிய கடினம் காட்டக்கூடாது என கூறப்படும் போது, எதிர்ப்பு என்பது எவ்வாறு உண்டாகும்? இதற்குரிய பதிலும் இங்கும் கூறப்பட்டுள்ளது. தனது எதிரியாகக் கருதக் கூடாது. மார்க்கத்தின் அடிப்படையில் எதிரியாக இருப்பவர்கள், தானே எதிர்ப்பில் முன்வந்துள்ளவர்கள், (உங்களது உள்ளத்தில் எதிர்ப்பு இருக்கிறதா? இல்லையா? என்பது வேறு விஷயம்.) உங்களுடன் எதிர்ப்பு காட்டுபவர்கள் ஆகியோரின் சீர்திருத்தத்திற்காக முயற்சி செய்யுங்கள்.

வெறுப்பைக் களைவதற்கு அறிவுரை வழங்கியவாறு ***ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:*** மனிதனுடன் கருணை மற்றும் அனுதாபம் கொள்வது மிகப்பெரிய இபாதத் ஆகும்.

அல்லாஹ்வின் விருப்பத்தைப் பெறுவதற்கு இது மிகச் சிறந்த வழியாகும். ***ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஓரிடத்தில் கூறுகின்றார்கள்:***

அல்லாஹ் கூறுகிறான்: மத, இன வேறுபாடின்றி மக்களுடன் அனுதாபம் காட்டுங்கள். பசித்தவர்களுக்கு உணவளியுங்கள். அடிமைகளை விடுதலை செய்யுங்கள். கடன் கேட்பவர்களுக்கு கடன் கொடுங்கள். சுமை தாங்கிகளின் சுமையைத் தூக்குங்கள். மனிதனுடன் உண்மையான அனுதாபத்தின் உரிமையைக் காட்டுங்கள்.

***மேலும் ஓரிடத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்:***

அனுதாபத்தை தனது சமுதாயத்தினரிடம் மட்டும் காட்ட விரும்புபவர்களுடைய பேச்சினை நான் ஒருபோதும் விரும்புவதில்லை. நான் மீண்டும் மீண்டும் உங்களுக்கு அறிவுரை வழங்குகின்றேன். நீங்கள் ஒருபோதும் தனது அனுதாபத்தின் வட்டத்தினை சுருக்கிக் கொள்ளாதீர்கள்.

***மேலும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:***

நீங்கள் இறை படைப்பினங்களுடன் உண்மையான சொந்தம் போன்று அனுதாபத்துடன் பழகுங்கள். தாய் தனது பிள்ளைகளுடன் பழகுவதைப் போன்று பழகுங்கள். தாயைப் போன்று இயல்பாகவே உணர்வு கொள்ளக்கூடியவர் ஒருபோதும் காட்டுவதற்காக நன்மை செய்யமாட்டார்.

ஆக, இதுதான் மற்றவர்களுடன் அனுதாபம், அன்பு கொள்வதற்கான தரமாகும். இது ஏனென்றால், இறைவனுடைய கட்டளையாகும். அவனது ரஸூலுடைய கட்டளையாகும். திருக்குர்ஆனில் அல்லாஹ் நமக்கு இதற்கான கட்டளையை இட்டுள்ளான். படைப்பினங்களுடன் அனுதாபம் காட்டுவது தொடர்பாக இஸ்லாத்தில் எவ்வளவு அழகான போதனை இருக்கின்றது. இந்த போதனையை வழங்கிய இறைவனை விட்டு விட்டு, இந்தக் காலத்தில் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய அடிமையிலிருந்து வந்த தூயவரை விட்டு விட்டு, நாம் வேறெங்கு சென்றாவது இந்தத் தரத்தைப் பெற முடியுமா? ஒருபோதும் முடியாது. ஆக, நமது 'எல்லாரிடத்தும் அன்பு, எவரிடத்தும் பகையில்லை' என்பது கடைசி நோக்கமல்ல. மாறாக இறை விருப்பத்தைப் பெறுவதற்கான ஒரு வழியாகும். இதனை நாம் எப்போதும் கண்முன் நிறுத்த வேண்டும். இதனை அடைய நாம் முயற்சி செய்ய வேண்டும்.

சில தினங்களுக்கு முன்பு எனக்கு சிந்தனை தோன்றியது. அதாவது, மனித இனத்திற்கு தொண்டு செய்வதற்கான 'Humanity First' என்ற நமது நிறுவனம், இதில் பணிபுரிபவர்களுக்கு அல்லது பொறுப்பாளர்களுக்கு ஒருவேளை, மார்க்கத்தை விட்டு விட்டு முற்றிலுமாக தன்னை தனித்தவனாக ஆக்கிக் கொள்ள வேண்டும்; அவ்வாறு தனித்தவனாக தொண்டாற்றினோம் என்றால், உலகில் நம்மை அதிகமாகப் புகழ்வார்கள் என்ற சிந்தனை

தோன்றியிருக்கலாம். நான் தலைமையகப் பொறுப்பாளர்களிடம் கூறினேன். உங்களுடைய முக்கியத்துவம் நீங்கள் மார்க்கத்துடன் ஒன்றிணைந்திருக்கிறீர்கள் என்பதனால் ஆகும். ஜமாஅத்தின் பெயர் எங்கேயாவது வரத்தான் செய்கிறது. மேலும் தேவைக்கேற்ப ஜமாஅத்தின் பெயர் பயன்படுத்தப்படுகிறது என்றால் அதில் தவறில்லை. ஆனால், நாம் இறைவனை மகிழ்விப்பதற்காக மனித இனத்திற்கு தொண்டாற்றுகிறோம் என்ற எண்ணம் கண்முன் இருக்க வேண்டும். அல்லாஹ் அடியானின் உரிமையை நிறைவேற்றுங்கள் என்று கட்டளையிட்டுள்ளான். அதனால் தான், நாம் மனித இனத்திற்கு தொண்டு செய்ய வேண்டும். மேலும் அல்லாஹ்வை மகிழ்விப்பதற்கு அல்லாஹ்வுடன் தொடர்பு கொள்வதும், தனது இபாதத்துகளை பாதுகாப்பதும் அவசியமாகும். இவையன்றி மனிதயினத் தொண்டு எந்தப் பயனையும் தராது.

நான் கூறிய விஷயம் அவர்களுக்கு புரிந்து விட்டது. ஆனால் ஏனைய நாடுகளில் ‘Humanity First’ உடைய கிளைகள், அதன் பொறுப்பாளர்கள், பணியாளர்கள் ஆகிய இவர்களில் ஓரிருவரைத் தவிர மற்ற அனைவரும் அஹ்மதிகளேயாவர். நான் அவர்களுக்கு கூற விரும்புவது என்னவென்றால், உங்களது பணியில் அருள், இறைவனுடன் வலுவான தொடர்பு உண்டாகும் போதுதான் ஏற்படும். உங்களது பணிகளை அல்லாஹ்வின் அருளைப் பெறுவதற்காக செய்யும் போதுதான், தனது பணிகளைத் துஆவின் மூலம் தொடங்கும் போதுதான் அருள் ஏற்படும். இவையன்றி நமது எந்தப் பணியிலும் அபிவிருத்தி ஏற்படாது. அதற்காக தனது அறிவினால் எந்த அளவு திட்டம் தீட்டினாலும் சரியே!

எவ்வாறிருப்பினும், நான் இதனைப் பற்றி எப்போதாவது கூற வேண்டும் என நினைத்திருந்தேன். எனவே இதனை தற்போது எடுத்துரைத்தேன். இதனை பொதுவாக எடுத்துக் கொண்டாலும் சரி அல்லது இது தொடர்பானது என நினைத்தாலும் சரி, நான் இதனை இன்று எடுத்துரைப்பது அவசியம் என கருதியதால் எடுத்துரைத்தேன்.

நான் மீண்டும் ஏற்கனவே கூறிய ‘எல்லாரிடத்தும் அன்பு; எவரிடத்தும் பகையில்லை’ என்பதன் பக்கம் வருகின்றேன். நான் தெளிவுபடுத்த விரும்புகின்றேன். அதாவது படைப்பினங்களுக்கு தொண்டாற்றுவது, படைப்பினங்களுடன் அனுதாபத்துடன் நடந்து கொள்வது, மேலும் அன்பினைப் பரப்புவது, எதிர்ப்பை அழிப்பது என்பது சந்தேகமின்றி மிகப்பெரிய நன்மையாகும். ஆனால் இந்த முழக்கத்தை நமது வாழ்வின் நோக்கம் என்று மட்டும் கருதிவிடக் கூடாது. நாம் இதனை செய்து விட்டோம் என்றால் அனைத்தையும் பெற்று விட்டோம் என்ற எண்ணம் வந்து விடக் கூடாது. நான் ஏற்கனவே கூறியது போன்று இந்த முழக்கம் நோக்கத்தினை அடைவதில் ஒரு பங்கு மட்டுமே ஆகும். நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எந்த நோக்கத்தை அடைவதற்காக தோன்றினார்களோ அதனை அடைவதில் இது ஒரு அடி ஆகும். அன்னாருடைய அடிமையாக இந்தக் காலத்தில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை அல்லாஹ் அனுப்பி இருக்கின்றான். அந்த நோக்கம் இறைவனின் ஏகத்துவத்தின் சரியான அறிவை ஏற்படுத்துவதேயாகும். இறைவனால் வழங்கப்பட்ட அனைத்து கட்டளைகளின்படி செயல்பட முயற்சி செய்ய வேண்டும். நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முன்மாதிரியை தனது கண்முன் வைக்க வேண்டும். அதனை அடைவதற்கு முழுமையாக முயற்சி செய்ய வேண்டும். ஏனென்றால் இவற்றின் மூலமாக எல்லா விதமான நல்லொழுக்கம் மற்றும் நன்மைகளைப் பெறுவதை சாத்தியமுள்ளதாக ஆக்க முடியும்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊது வாக்களிக்கப்பட்ட சீர்திருத்தவாதி (ரலி) அவர்களின் காலத்தில் ஆலிம்களின் மத்தியில் ஜமாஅத் Motto (மோட்டோ) வின் நோக்கம் என்னவாக இருக்க வேண்டும் என்ற கருத்தில் பலரும் கட்டுரைகளின் வடிவில் விவாதம் நடத்தினர். இது அல் ஃபஸ்லில் பிரசுரிக்கப்பட்டது அல்லது பல சான்றோர்கள் இதனைக் குறித்த தனது கருத்துக்களை வெளிப்படுத்தினார்கள். இதற்கு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட சீர்திருத்தவாதி அவர்கள் ஜமாஅத்திற்கு வழங்கிய மோட்டோ அல்லது ஜமாஅத்திற்கு வழிகாட்டியது எப்படிப்பட்டதென்றால், அதன் மூலம் மார்க்கமும் வலுப்பெறும். ஈமானும் வலுப்பெறும். அல்லாஹ்வின் உரிமைகளும் நிறைவேறும். அடியானுக்குரிய உரிமைகளும் நிறைவேறும். இரண்டு சான்றோர்களில் ஒருவர் கூறினார்: நமது நோக்கம் فَاسْتَبِقُوا الْخَيْرٰتِ (2:149) அதாவது நன்மையில் முன்னேறுவது ஜமாஅத்தின் நோக்கமாக இருக்க வேண்டும் எனக் கூறினார். மற்றவர், நமது மோட்டோ, நோக்கம் உலகத்தை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை வழங்க வேண்டும் என்பதாக இருக்க வேண்டும் என்றார்.

***ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊது (ரலி) அவர்கள் கூறினார்கள்:***

ஏதாவது நோக்கம் கண்டிப்பாக இருக்க வேண்டும். உலகிலுள்ள அமைப்புகள் அஞ்சுமன்கள் போன்றவை நிறுவப்படும் போது ஏதாவது ஒன்றை தனது நோக்கமாகக் கொள்கின்றன. நல்ல மற்றும் உரிமைகளை நிறைவேற்றும் அமைப்புகளாக இருந்தால் அதனை அடைவதற்கு நல்ல முறையில் முயற்சியும் செய்கின்றன. இதன் மூலம் அவர்கள் ஏனையவர்களை விட தம்மை மேலானவர்களாக ஆக்கிக் கொள்கின்றனர்.

உலகில் ஒழுக்க மேம்பாட்டினை நோக்கமாகக் கொள்வதற்கு முழக்கங்கள் எழுப்பப்படுகின்றன. கல்வித் தரத்தை உயர்த்துவதை நோக்கமாகக் கொள்வதற்கு முழக்கங்கள் செய்யப்படுகின்றன. ஏதாவது ஓரிடத்தில் பொதுமக்கள் அல்லது ஒரு பிரிவினரது உரிமை பறிக்கப்படுகின்றது. தனது மோட்டோ –வாக ஆக்கிக் கொள்கின்றன. அதற்கான முயற்சிகளைச் செய்கின்றனர். முழக்கங்களை எழுப்புகின்றனர். மேலும் ஏதாவது ஓரிடத்தில் வேறு ஏதாவது பிரச்சனை என்றால் அங்கு ஒரு விஷயம் நோக்கமாக மேற்கொள்ளப்படுகின்றது. ஆக, அடிப்படை நோக்கம் என்னவென்றால், நாம் அந்த விஷயத்தை உலகில் நிலைநிறுத்துவதாகும். அதனை தனது ஜமாஅத்தினரிடம் எந்நேரமும் இருக்கச் செய்வதாகும். தனக்கு முன்பும் இருக்கச் செய்வதாகும். இந்த உலகில் ஆயிரக்கணக்கான நன்மைகள் இருக்கின்றன. ஏதாவதொரு நன்மையைத் தேர்ந்தெடுத்தோம் என்றால் வெளிப்படையில் அது ஒரு நல்ல விஷயமாகும். ஆனால் இதன் மூலம் ஏனைய நன்மைகளின் தேவையில்லை என்பதாகி விடாது. மாறாக தேவை மற்றும் வசதிகளை கண்முன் வைத்தவாறு அந்த நன்மைகளில் ஏதாவதொரு நன்மை 'மோட்டோ' –வாக ஆக்கப்படுகின்றது.

எவ்வாறிருப்பினும், எந்தவொரு நல்ல மோட்டோவை யார் நிர்ணயித்தாலும் அது அவருக்கு நன்மையாகும். அவர்கள் இதற்கு விளக்கம் தந்துள்ளார்கள். சில மோட்டோக்கள் எவ்வாறானதாக இருக்கும் என்றால், அவற்றிற்கு பரஸ்பரம் ஒரு தொடர்பு இருக்கும். உதாரணமாக, இறைவனுக்கு கட்டுப்படுதல் என்று ஒரு மோட்டோ இருக்கிறது. இதனைப் போன்று நன்மையில் முன்னேறுங்கள் என்ற மோட்டோவும் உள்ளது. இவை இரண்டும் பரஸ்பரம் ஒரு தொடர்பைக் கொண்டுள்ளன. ஏனென்றால் இறைவனுக்கு கட்டுப்படாமல் நன்மைகளைச் செய்வது சாத்தியமற்றதாகும். இதனைப் போன்று நல்லவராக இல்லாதவர் இறைவனுக்கு கட்டுப்பட்டவராக மாட்டார். இதைப் போன்று நான் உலகத்தை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை வழங்குவேன் என்ற மோட்டோ உள்ளது. அதேபோல் நான் நன்மையில் முன்னேற முயற்சி செய்வேன் என்றும் உள்ளது. இவை இரண்டும் பரஸ்பரம் ஒன்றுபட்டதாகும். ஒன்று மற்றவைக்குள் வந்து விடுகிறது. ஆக, நன்மைகள் அனைத்தும் சிறந்ததாகும். அவற்றை நாம் பின்பற்ற முயற்சி செய்ய வேண்டும். ஆனால் மோட்டோவைப் பற்றிய கேள்வி எழுந்த போது, இதன் பக்கம் கவனம் செலுத்தியவாறு சிலர் தமது நன்மைகளை சுருக்கிக் கொள்கின்றனர். அல்லது அந்த நன்மையை மட்டுமே அனைத்துவமாகக் கருத ஆரம்பித்து விடுகின்றனர்.

எவ்வாரென்றால் நமது நமது இளைஞர்கள் அல்லது வேறு சிலர் தமது மார்க்க நிலையை மறந்து விடுகின்றனர். ஆனால் உலகில் காட்டுவதற்காக எல்லாரிடத்தும் அன்பு; எவரிடத்தும் பகையில்லை என்ற முழக்கத்தை மிகவும் அதிகமாக எழுப்புகின்றனர். இஸ்லாமிய போதனைகளைப் பரப்புவது என்பது நல்லெண்ணம் தான். இந்த முழக்கமும் மிகச் சிறந்தது தான். ஆனால், இது மட்டுமே நமது நோக்கமல்ல. நான் கூறியது போன்று நமது நோக்கம் மிகப் பெரியதாகும். இதைப் போன்று, படைப்பினங்களுக்குத் தொண்டாற்றுவது என்பது ஒன்றுமல்ல. இறைவனது நினைப்பு மனதிலிருந்து மறைந்து விடுகிறது என்றால் இதற்கு எந்தப் பயனும் இல்லை.

***ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் எழுதுகின்றார்கள்:***

நான் இந்தக் கட்டுரையைப் படித்த போது எனக்கு ஒரு யூதனுடைய கதை நினைவுக்கு வந்தது. அவன் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுடன் பேசிக் கொண்டிருந்த போது, எங்களுக்கு முஸ்லிம்கள் மீது அதிகமாக பொறாமை ஏற்படுகின்றது என்றார். அதற்கு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் பொறாமை ஏற்படுவதற்கு என்ன காரணம்? ஏன் பொறாமை ஏற்படுகின்றது? என வினவினார்கள். யூதன் கூறினான். இஸ்லாத்தில் ஒரு தனிப்பட்ட சிறப்பு இருக்கிறது. உலகிலுள்ள எந்த விஷயமும் இஸ்லாத்தின் கட்டளைகளில் இல்லாமல் இல்லை. திருக்குர்ஆனில் இல்லாமல் இல்லை. தனிப்பட்ட ரீதியிலிருந்து உலகளவிலான எல்லா கட்டளைகளும் பிரச்சனைகளும் அதற்கான தீர்வுகளும் அதில் அடங்கி உள்ளது. இந்த விஷயம் எப்படிப்பட்டதென்றால், இது எங்களை பொறாமை கொள்ளச் செய்கிறது என்றார்.

ஆக, இந்த விஷயத்தை நம்மில் ஒவ்வொருவரும் கண்முன் வைத்தோம் என்றால், இஸ்லாத்தின் ஏதாவதொரு விஷயத்தை மோட்டோ –வாக தேர்ந்தெடுப்பது சரியானதல்ல என்பது மிகத் தெளிவாகத் தெரிய வரும். சந்தேகமின்றி فَاسْتَبِقُوا الْخَيْرٰتِ நன்மைகளில் முன்னேறுவது என்பது ஒரு சிறந்த மோட்டோ ஆகும். இதைப் போன்று நான் உலகத்தை விட மார்க்கத்திற்கு முக்கியத்துவம் வழங்குவேன் என்பதும் சிறந்ததாகும். திருக்குர்ஆனும் இதன் பக்கம் கவனமூட்டியுள்ளது.

بَلْ تُؤْثِرُوْنَ الْحَيٰوةَ الدُّنْيَا ۝١٧ وَالْاٰخِرَةُ خَيْرٌ وَّاَبْقٰى ۝١٨ (87:17–18)

அதாவது, அறிவிலிகள், மறுமையை விட இவ்வுலக வாழ்விற்கே முன்னுரிமை வழங்குகிறார்கள். ஆனால் அதே வேளையில் மறுமையோ மிகச் சிறந்ததும் என்றும் நிலையானதும் ஆகும்.

நாம் ஜுமுஆவிலும் இந்த வசனங்களை ஓதவும் செய்கின்றோம். இதனைத் தவிர இஸ்லாம் எண்ணற்ற போதனைகளை வழங்கியுள்ளது. ஆக, திருக்குர்ஆனின் எந்த போதனைதான் மோட்டோவாக ஆக முடியாது? எந்த போதனைதான் நோக்கமாக ஆக முடியாது? எதன் மீது பார்வை படுகின்றதோ அதனைப் பற்றி சிந்தியுங்கள். அது உள்ளத்தை தன் பக்கம் ஈர்த்து விடும்.

அன்னார் இந்த முன்னுரைக்குப் பிறகு கூறினார்கள்: திருக்குர்ஆனிலிருந்து நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தோன்றிய காலம் (30:42) ظَهَرَ الْفَسَادُ فِي الْبَرِّ وَالْبَحْرِ அதாவது நிலத்திலும் நீரிலும் குழப்பம் பரவிக் கிடந்ததற்கு ஒப்பானதாக இருந்தது. அந்தக் காலத்தில் தோன்றாத தீமையே இல்லை என்பது தெரிய வருகின்றது.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய நிழல் ஆவார்கள். எனவே ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் காலமும் அந்தக் காலத்தின் நிழல் ஆகும். மேலும் நாம் பார்க்கின்றோம். இன்றும் அனைத்து விதமான தீமைகளும் தனது உச்சத்தை அடைந்துள்ளன. எனவே இன்று மதமும் தேவைப்படுகின்றது. எல்லா விதமான நல்லொழுக்கமும் தேவைப்படுகின்றது. உலகின் ஒவ்வொரு சிறப்பும், முன்னேற்றமும் தேவைப்படுகின்றது. மக்களின் உள்ளத்திலிருந்து ஈமான் மறைந்த போது நல்லொழுக்கம் அங்கிருந்து மறைந்து விட்டது. உண்மையான உலக முன்னேற்றமும் மறைந்து விட்டது. தற்போது மக்கள் எதனை முன்னேற்றம் எனக் கருதுகிறார்களோ அது நஃப்ஸின் வெளிப்பாடாகும். அது தனிப்பட்ட ரீதியில் இருந்தாலும் சரி, உலக அளவில் இருந்தாலும் சரி, தற்போது மக்கள் எதனை முன்னேற்றம் எனக் கருதுகிறார்களோ அது சுய நலமாக இருக்கின்றது. அதனை உலக முன்னேற்றம் எனக் கூற முடியாது. ஏனென்றால் அதன் மூலம் உலகின் ஒரு பகுதி மட்டுமே பயனடைகிறது. ஏனையவைகள் அடிமையாக்கப்படுகின்றன. அது அரசியல் ரீதியில் அடிமையாக இருந்தாலும் சரி, பொருளாதார ரீதியில் அடிமையாக இருந்தாலும் சரி ஏதாவது ஒருவகையில் ஒரு பகுதி அடிமை ஆகின்றது. எவ்வாறாயினும் அப்படிப்பட்டவர்களுக்கு இது முன்னேற்றம் அல்ல. முன்னேற்றம் அடைபவர்களிடம் சுயநலம் இருக்கின்றது. அதற்கு அவர்கள் முன்னேற்றம் எனக் கூறுகின்றனர். ஆக இப்படிப்பட்ட நேரத்தில் அந்த வசனத்தை நோக்கமாக ஆக்க வேண்டும். இந்த வசனத்தை விட்டு விட வேண்டும் என்பது தவறாகும். மாறாக திருக்குர்ஆனின் ஒவ்வொரு வசனமும் நமது நோக்கம் ஆகும். நாம் கண் முன் நிறுத்த வேண்டியவையாகும். அவ்வாறு இருக்கவும் வேண்டும். ஆக நமது மோட்டோ முழு திருக்குர்ஆனும் ஆகும்.

ஏதாவது ஒரு சுருக்கமான மோட்டோ தேவையென்றால் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறினார்கள்: அதனையும் அல்லாஹ் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மூலம் நிர்ணயித்துள்ளான். அது லாயிலாஹ இல்லல்லாஹு முஹம்மதுர் ரஸூலுல்லாஹ் ஆகும். இது முழு திருக்குர்ஆனின் சாராம்சம் ஆகும். உண்மையும் இதுவே ஆகும். எல்லா போதனைகளும், அனைத்து உயர் நோக்கங்களும் ஏகத்துவத்துடனே தொடர்பு கொண்டுள்ளது. இதைப் போன்று அவர்களது பரஸ்பர தொடர்பு, அடியானுக்கு இறைவனுடன் தொடர்பு இதுவும் ஏகத்துவத்தின் கீழ் வந்து விடுகிறது. ஏகத்துவம் எப்படிப்பட்டதென்றால் அது நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய உதவியின்றி வெளிப்பட முடியாது. இதனால் லாயிலாஹ இல்லல்லாஹ்வுடன் முஹம்மதுர் ரஸூலுல்லாஹ் என்று இணைக்கப்பட்டுள்ளது.

உண்மையான வணக்கத்திற்குரியவனைத் தேடவேண்டும். அல்லது இறைவனை நீங்கள் பார்க்க வேண்டும் என்றால் முஹம்மது ரஸூல் (ஸல்) அவர்களுடைய உதவியுடன் பாருங்கள். ஆக பெருமானார் தான் உண்மையான வணக்கத்திற்குரியவனைப் பார்க்கக்கூடிய அந்த கண்ணாடி ஆவார்கள். அன்னாருடைய உதவியைப் பெறும் போது அல்ஹம்து விலிருந்து அந்நாஸ் வரை ஒவ்வொரு இடத்திலும் லாயிலாஹ இல்லல்லாஹ் உடைய கருத்து தென்படும். ஆக நபி (ஸல்) அவர்களின் வருகையின் மூலமாகத்தான் உலகில் ஏகத்துவம் நிலைபெற்றது. அதற்கு முன்பாக சிலர் ஹஸ்ரத் உஸைர் அவர்களையும் சிலர் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களையும் கடவுளின் மகனாகக் கொண்டிருந்தனர். சிலர் மலக்குமார்களை வணக்கத்திற்குரியவனாகக் கொண்டிருந்தனர். இப்படிப்பட்ட சமயத்தில் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தான் அனைத்து விதமான குழப்பத்தையும் களைந்தார்கள். மேலும் அல்லாஹ் பெருமானார் (ஸல்) அவர்களையே ஏகத்துவத்தை நிலைபெறச் செய்ய நியமித்தான். அல்லாஹ்வின் அருளால் பெருமானார் (ஸல்) அவர்கள் மூலமாகவே உலகில் ஏகத்துவம் நிலைபெற்றது.

அந்த லாயிலாஹ இல்லல்லாஹ் என்ற மோட்டோவைத்தான் நாம் பாங்கு நேரத்தில் கூறுகின்றோம். ஒருவரை இஸ்லாத்தில் இணைக்கும் போதும், அவரை லாயிலாஹ இல்லல்லாஹ் எனக் கூறச் செய்கின்றோம். ஏனென்றால் இதன் பெயர் தான் உண்மையான இஸ்லாம் ஆகும். ஒருவரிடம் மார்க்க பலவீனம் ஏற்படுகின்றதென்றால் அதற்கு இதுவே காரணமாகும். அதாவது லாயிலாஹ இல்லல்லாஹ் அவருக்கு முன்பிருந்து விலகி விட்டதாக இருக்கும். அவ்வாறில்லாமல் லாயிலாஹ இல்லல்லாஹ் எந்நேரமும் முன்னால் இருக்கும் என்றால் பிறகு மனிதன் மார்க்க

பலவீனத்திலிருந்து பாதுகாப்பாக இருப்பான். பெரும்பாலார் கூறுவதைப் போல் வெறும் வாயளவில் லாயிலாஹ இல்லல்லாஹ் என்று கூறுவது நோக்கம் அல்ல. பொய் சொன்னாலும் லாயிலாஹ இல்லல்லாஹ் என்று கூறி பொய் சொல்வார்கள். மாறாக லாயிலாஹ இல்லல்லாஹ் என்று கூறினோம். பிறகு இறைவனுடைய மகத்துவம், கம்பீரம், அவனது அச்சம் அவனது அனைத்து பண்புகளும் முன்னால் வந்து விட வேண்டும். ஏற்கனவே கூறப்பட்டதைப் போன்று லாயிலாஹ இல்லல்லாஹ் உடைய உண்மைத்துவம் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மூலமாகவே வெளிப்படுகின்றது.

ஆக, மனிதன் எப்போது வரை நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது தன்னை மாய்த்துக் கொள்ளமாட்டானோ ஏகத்துவத்தை முழுமை என்று புரிந்து கொள்ள முடியாது. அல்லது முழுமையான ஏகத்தவத்தைப் புரிந்து கொள்ள முடியாது. மேலும் அதன் விரிவான வெளிப்பாடாகிய திருக்குர்ஆனை புரிய முடியாது. எவர் நபி (ஸல்) அவர்களிடத்தில் தன்னை மாய்த்தவாறு ஏகத்துவத்தைப் புரியமாட்டார்களோ அவர்கள் அறிவிருந்தும் இணை வைத்தலில் ஈடுபட்டிருக்கிறார்கள். முஸ்லிம் அல்லாதவர்களை ஒருபுறம் வையுங்கள். முஸ்லிம்களிலும் கூட பெரும்பாலார் பீர்களையும், ஃபக்கீர்களையும் தமது இறைவாக்கி வைத்துள்ளனர். ஆனால் அஹ்மதிகளைப் பார்த்து இவர்கள் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை இழிவுபடுத்தி இஸ்லாத்தின் வட்டத்திலிருந்து இவர்கள் வெளியேறி விட்டனர் எனக் கூறுகின்றனர். ஆனால் உண்மையில் இவர்கள் தான் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய அந்தஸ்தைப் புரியவில்லை. இதன் காரணமாக ஏகத்துவத்திலிருந்தும் தூரம் விலகியுள்ளனர்.

இக்காலத்தில் ஏகத்துவத்தைப் பற்றிய சரியான அறிவு, ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு கிடைத்துள்ளது. இவை அனைத்தும் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடத்தில் தன்னை மாய்த்துக் கொண்ட காரணத்தால் அன்னாருக்கு கிடைத்ததாகும். யாரை உலகம் காஃபிர் என்று கூறுகிறதோ அவர் உண்மையில் ஏகத்துவத்தைக் கொண்டவர் ஆவார். அன்னார் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடத்தில் தன்னை மாய்த்துக் கொண்டார்கள். அதன் மூலம் அவர்களுக்கு ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் மரணித்து விட்டார்கள் என்பது தெரிய வந்தது. அவர்கள் உயிருடன் இருக்கிறார்கள் என நம்புவது இணை வைத்தல் ஆகும் என்பதும் தெரிய வந்தது. அன்னாருக்கு முன்பு இலட்சக்கணக்கான ஆலிம்களும், மார்க்க அறிஞர்களும் ஈஸா (அலை) அவர்களிடம் இறை பண்புகள் உள்ளதாகக் கூறி வந்தனர்.

உதாரணமாக, அவர் தற்போது வரை உயிருடன் வானத்தில் இருக்கிறார். அவர் மரணித்தவரை உயிர் பெறச் செய்து வந்தார். அவருக்கு மறைவானவற்றைப் பற்றிய அறிவு இருந்தது போன்ற பலவற்றை கூறி வந்தனர். ஆனால் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மூலம் இன்று நாம், மாறாக ஒவ்வொரு அஹ்மதி சிறுவரும் அறிவு மற்றும் ஆதாரம் மூலம் இந்த கொள்கையின் கீழ் இருப்பதை விரும்புவதில்லை. இதனைப் போன்று மேலும் பல விஷயங்கள் உள்ளன. இவற்றை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது தன்னை மாய்த்துக் கொண்டவாறு அன்னாரிடமிருந்து ஒளியினைப் பெற்று நமக்கு கூறியிருக்கிறார்கள். மேலும் இணை வைத்தலிலிருந்து நம்மை தூரம் விலக்கி விட்டார்கள்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களும் இக்கால மக்களுக்கு லாயிலாஹ இல்லல்லாஹ் உடைய வெளிப்பாட்டை காண்பித்திருக்கிறார்கள். இந்த விஷயம் தான் இஸ்லாத்தின் அடிப்படை ஆகும். இது ஒவ்வொரு ஏகத்துவவாதியிடமும் தென்படுவது அவசியமாகும். ஏனையவைகள் விளக்கங்கள் ஆகும். அது பலதரப்பட்ட மக்களுக்கு பல்வேறு கோணங்களில் அது மாறி விடும். உதாரணமாக, நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒருவருக்கு மிகப்பெரிய நன்மையாக தாய் தந்தையருக்கு சேவை செய்வதைக் கூறினார்கள். வேறொருவருக்கு மிகப்பெரிய நன்மையாக இறை வழியில் போரிடுவது எனக் கூறினார்கள். மற்றொருவருக்கு மிகப்பெரிய நன்மையாக நடு இரவுத் தொழுகையை தொழுவது எனக் கூறியுள்ளார்கள். ஆக ஒவ்வொருவருக்கும் அவரது அடிப்படை பலவீனத்தைக் களைவதற்கு கவனமூட்டியுள்ளார்கள். ஆனால் இதற்கு ஏனைய நன்மைகளைச் செய்ய வேண்டிய அவசியம் இல்லை என்பது பொருளல்ல.

ஆக நினைவில் கொள்ள வேண்டும். அதாவது திருக்குர்ஆனின் அனைத்து போதனைகளும் தத்தமது இடத்தில் மிகச்சிறந்த மற்றும் பலன் அளிக்கக் கூடியதாகும். ஆனால் லாயிலாஹ இல்லல்லாஹ் அனைத்தை விடவும் மேலானதாகும். இதுதான் அசல் மோட்டோ ஆகும். இதனைத் தான் நாம் எப்போதும் கண்முன் நிறுத்த வேண்டும். ஏகத்துவத்தின் உண்மைத்துவம் மற்றும் அது நிலை பெறுவது குறித்து சிந்திப்பது அவசியமாகும். ஏகத்துவம் என்பது மனிதன் சிலையை வணங்கக்கூடாது என்பதன் பெயர் அல்ல. அல்லது ஒரு மனிதனை இறைவனுக்கு நிகராக உயிருடன் இருப்பவன் எனக் கருதுவதன் பெயர் அல்ல. அல்லது இறைவனுக்கு இணையாக யாரையும் வைக்கக் கூடாது என்பதல்ல. மாறாக, உலகின் அனைத்துப் பணிகளிலும் ஏகத்துவத்துடன் தொடர்பு இருக்கின்றது.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், தாம் தூங்கச் செல்லும் போதும் உளூ செய்யும் போதும் ஏகத்துவத்தை (லாயிலாஹ இல்லல்லாஹ்) கூறி வந்தார்கள். ஒரு மனிதனுக்கு உலகில் ஏதாவது ஒன்றின் மீது நம்பிக்கையோ ஈர்ப்போ ஏற்பட்டு விட்டால் அந்த மனிதன் இணை வைத்தல் என்ற இடத்திற்குச் சென்று விடுகிறான். பிறகு அவனது ஏகத்துவவாதி என்ற வாதம் பொய்யாகி விடுகின்றது. ஏனென்றால் ஏகத்துவத்திற்கு கட்டாய நிபந்தனை என்னவென்றால், மனிதன் இறைவன் மீது மட்டும் நம்பிக்கை வைக்க வேண்டும். அவனையே சார்ந்திருக்க வேண்டும். ஏகத்துவம் என்பதன் பொருள் எல்லா பணிகளிலும் அது மார்க்கப் பணியாக இருந்தாலும் சரி, உலகப் பணியாக இருந்தாலும் சரி, மனிதனுடைய பார்வை ஓரிறைவன் பக்கம் மட்டுமே இருக்க வேண்டும். சந்தேகமின்றி அனைத்து நல்ல சொற்களும் தத்தமது இடத்தில் சிறந்த, நல்ல மோட்டோக்கள் ஆகும். ஆனால் முழுமையான ஏகத்துவவாதி ஆவதற்கு மனிதனின் பார்வையிலிருந்து எல்லா பொருள்களும் மறைந்து விட வேண்டும் என்பதும், அல்லாஹ்வைத் தவிர மற்ற அனைத்தும் ஒன்றுமற்றதாய் ஆகிவிட வேண்டும் என்பதும் அவசியமாகும்.

ஆக, உண்மையான மோட்டோ லாயிலாஹ இல்லல்லாஹு முஹம்மதுர் ரஸூலுல்லாஹ் என்பதாகும். இதில் அனைத்து விதமான நன்மைகளும் ஒன்றிணைந்து விடுகின்றன. மேலும் ஏகத்துவத்தைப் புரிந்து கொள்வதிலுள்ள கஷ்டங்களுக்கான தீர்வுகளை நமக்கு இவையே கூறுகின்றன. தடைகளைக் களைவதற்கு ஏதாவது முன்மாதிரி இருக்க வேண்டும். இதற்கு நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய அழகிய முன்மாதிரியே நமக்கு போதுமானதாகும். இதனை ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் ஒரு வரியில் கான குலுக்குஹுல் குர்ஆன் எனக் கூறியுள்ளார்கள். அதாவது அவர்களது நடைமுறை திருக்குர்ஆன் ஆகவே இருந்தது என்றார்கள். இந்த ஒரு வரியில் ஏகத்துவத்தின் உயர் தரமும் எடுத்துரைக்கப்பட்டு விட்டது. திருக்குர்ஆனின் கட்டளைகளுக்கான செயல் முன்மாதிரியும் நிலைநாட்டப்பட்டு விட்டது. மேலும் கட்டளைகளின் விளக்கமும் முன்னால் வந்து விட்டது.

ஆக, எவர் முஹம்மது ரஸூல் (ஸல்) அவர்களை புரிந்து கொண்டாரோ அவர் அல்லாஹ்வை புரிந்து கொண்டார். எவர் இறைவனை புரிந்து கொண்டாரோ அவர் அனைத்தையும் புரிந்து கொண்டார். ஏனென்றால் இணை வைத்தல் தான் அனைத்து விதமான தீமைகளுக்கும், கவனமின்மைக்கும் மற்றும் பாவத்திற்கான ஆணிவேர் ஆகும். ஏகத்துவத்தில் நிலைபெற்ற பிறகு மனிதனிடம் உயர் நல்லொழுக்கம், அறிவு, ஞானம், சமூக அமைப்பு, அரசியல், ஏனைய விஷயங்களில் புலமைகள் போன்ற அனைத்தும் வந்து விடும். ஏனென்றால் அல்லாஹ்வின் ஒளி ஒரு நிவாரணம் ஆகும். அதில் எல்லா விதமான நோயிற்கும் மருந்து உள்ளது.

ஆக, நமது மோட்டோவானது இறைவன், தானே நிர்ணயித்ததாகும். அது லாயிலாஹ இல்லல்லாஹ் என்பதாகும். மற்றவை அதன் விளக்கங்கள் ஆகும். அவை அறிவுரை என்ற அளவில் பயன்தரக்கூடியதாகும். இந்தக் காலகட்டத்தில் தஜ்ஜால் தனது அனைத்து சக்திகளுடன் உலகில் வலம் வந்து கொண்டிருக்கிறான். அவனது நோக்கம் நான் மார்க்கத்தை விட உலகத்திற்கு முன்னுரிமை வழங்குவேன் என்பதாகும். ஆனால் நமது கடமை நாம் இதற்கெதிரில் உலகத்தை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை வழங்குவதற்கான முழக்கத்தை எழுப்ப வேண்டும். இதனால் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களும் பைஅத் நிபந்தனையில் இந்த வரியையும் சேர்த்துள்ளார்கள். இதன் பொருள் தம்மீது மார்க்கக் கல்வி நிலைபெறச் செய்வோம். மேலும் எதிரிகளின் ஒவ்வொரு ஆட்சேபனைக்கு எதிரில் இஸ்லாத்தின் அழகிய முகத்தைக் காட்டுவோம் என்பதாகும்.

இவை அனைத்தும் நாம் லாயிலாஹ இல்லல்லாஹு முஹம்மதுர் ரஸூலுல்லாஹ் என்பதை உலகில் நிலைபெறச் செய்பவர்வளாக ஆக வேண்டும் என்பதனால் ஆகும். நாம் இக்காலத்தில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் இந்த நோக்கத்தை அடைவதற்காக பைஅத் செய்துள்ளோம். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு அல்லாஹ் வஹியாக இதனை அறிவித்தான். அதாவது,

خُذُوا التَّوحِيدَ التَّوحِيدَ يَا أَبنَاءَ الفَارِسِ۔

பாரசீகத்தின் மகன்களே! ஏகத்துவத்தை பற்றிப் பிடித்துக் கொள்ளுங்கள்.

பாரசீகத்தின் மகன்களே என்பது அன்னாருடைய குடும்பத்தினர் மட்டுமல்ல. மாறாக, முழு ஜமாஅத்தும் ஆன்மீக ரீதியில் பாரசீகத்தின் மகன்கள் என்பதன் கீழ் வருவார்கள். மேலும் இந்தக் கட்டளை முழு ஜமாஅத்திற்கும் உரியதாகும். கஷ்டத்தின் போது மனிதன் ஏதாவதொரு சிறந்ததை பற்றிப் பிடிப்பான் என்பது விதி ஆகும்.

அன்னார் கூறுகின்றார்கள்: நீங்கள் கஷ்டத்தின் போது ஏகத்துவத்தை பற்றிப் பிடித்துக் கொள்ளுங்கள். இதற்குள் ஏனைய அனைத்தும் இருக்கின்றது.

ஆக நமது ஜமாஅத்தின் மீது கடமை என்னவென்றால் லாயிலாஹ இல்லல்லாஹ் என்ற மோட்டோவை எந்நேரமும் தன்முன் வைக்க வேண்டும். இன்றைய நாட்களில் இணை வைத்தலுடன் நாத்திகமும் மிக வேகமாகப் பரவுகின்றது. நாத்திகம் இணை வைத்தலின் ஒரு பிரிவு ஆகும். இணை வைத்தல் நாத்திகத்தின் ஒரு பிரிவு ஆகும். ஆக, நாம் நம்மை ஒரு முழக்கத்தில் சுருக்கிக் கொண்டவாறு, அதனை மட்டும் போதும் என ஏற்றுக் கொண்டவாறு இம்மையையும் மறுமையையும் சீர்படுத்தக் கூடியவர்களாக நாம் ஆக முடியாது. மேலும் மனிதயின தொண்டிற்காக நாம் நமது தொழுகைகளை இபாதத்துகளை விட முடியாது. அவ்வாறு செய்பவருக்கு, கூறுபவருக்கு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுடன் எந்தத் தொடர்பும் இல்லை.

ஆக, நாம் நமது உண்மையான குறிக்கோளை நோக்கத்தை எந்நேரமும் கண்முன் நிறுத்துவது அவசியமாகும். இதன் மூலம் நாம் அனைத்து வித மார்க்க, உலக அருள்களைப் பெறுபவர்களாக ஆக வேண்டும். அல்லாஹ் நம் அனைவருக்கும் இதன் உண்மைத்துவத்தை புரிவதற்கான வாய்ப்பினை வழங்குவானாக!

நான் ஜுமுஆ தொழுகைக்குப் பிறகு ஒரு ஜனாஸா தொழுகையும் தொழ வைப்பேன். இது ஸித்தீக் அக்பர் ரஹ்மான் சாஹிப் உடையதாகும். இவர் மர்ஹூம் ஃபைஸுர் ரஹ்மான் சாஹிப் உடைய மகன் ஆவார். Waltham Forest –ல் வசித்து வந்தார்கள். மே 7ம் தேதி புற்றுநோயின் காரணமாக தனது 40 வயதில் மரணம் அடைந்துள்ளார்கள். இன்னா லில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன். பதவி என்ற ரீதியில் ஜமாஅத்தின் பொறுப்புகளில் இருப்பதற்கு இவருக்கு பெரியதாக வாய்ப்பு எதுவும் கிடைக்கவில்லை. பணியாளர் என்ற ரீதியில் எப்போதும் ஒரு சிறந்த பணியாளராகத் திகழ்ந்து வந்தார். கிலாஃபத்துடன் உறுதியான தொடர்பு வைத்திருந்தார். கிலாஃபத்துடன் உறுதியான தொடர்பு வைத்திருந்தார். இவருக்கு இறை இருப்பின் மீதும் துஆவின் மீதும் உறுதியான நம்பிக்கை இருந்தது. நீண்ட காலமாக நோயாளியாக இருந்து வந்துள்ளார். இவருக்கு புற்றுநோய் இருந்தது. மிகவும் பொறுமையுடனும், தைரியத்துடனும் இவர் தனது நோயுற்ற காலத்தைக் கழித்துள்ளார். அல்லாஹ் அவருடன் மன்னிப்புடன் பரிமாறுவானாக! தனது விருப்பமான சொர்க்கத்தில் இடமளிப்பானாக! இவரது தாயாருக்கும் பொறுமையை வழங்குவானாக! இவரது மனைவிக்கும் ஒன்றரை வயதுள்ள இவரது பிள்ளைக்கும் அல்லாஹ் பாதுகாவலனாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக!

★ ★ ★ ★ ★

**JUMUA KHUTBA**
**HAZRAT KHALIFATUL MASIH V**
at BAIT-UL-FUTUH Mosque, London.
on **09.05.2014**

Translated by : Maulavi N. ZIAUL HAQ Sb.
Typeset by : A. MUHAMMAD NISAR
Published by : MAJLIS KHUDDAMUL AHMADIYYA
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005. TELEFAX : 0462 - 2352456